# ஞாலகுருவின் படைப்புக்கள்

# “தமிழர்களைப் பதினெண்சித்தர்களுடைய சாத்திறங்களால்தான் ஒன்றுபடுத்த முடியும்!”



அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம்,
12வது பதினெண்சித்தர் பீடாதிபதி,
அந்தணர் அண்ணல், ஞாறுச்சாரியார்,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார்.

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,125 மாசி மாதம்

இந்து இலக்கியக் கழக வெளியீடு

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,125 மாசி மாத வெளியீடு

**தலைப்பு:-**

"தமிழர்களைப் பதினெண்சித்தர்களுடைய சாத்தர, சாத்திர, சாத்திறங்களால்தான் ஒன்றுபடுத்த முடியும்!"

# உள்ளுறை


1. **"நம்மவர்கள் ஒவ்வொருவரையும் ஆற்றல் மிக்க தலைவர்களாக உருவாக்க வேண்டும்."** - குருதேவர் அவர்கள் இந்துவேத மாநாட்டிற்குப் பின் விண்வெளிச் சன்னிதானமாகிய தமது மாணுக்கருக்கு எழுதிய அஞ்சல்.
2. **"நம் நாட்டில் உள்ள அமைப்புக்கள் அனைத்தையும் பற்றி மறுசிந்தனை செய்வதற்காக அழைப்பு."** - கும்பகோணம் தாராசுரத்தைச் சேர்ந்த தமிழினச் சிந்தனையாளருக்கு குருதேவர் அவர்கள் எழுதிய அஞ்சல்.
3. **"மெய்யான தமிழுணர்வுடைய மாவீரருக்கு அறிவிப்பு வேண்டுகோள்."** - அரசின் தமிழ் வளர்ச்சித் துறையில் பணிபுரியும் தமிழாய்வு அலுவலருக்கு குருதேவர் அவர்கள் விடுத்த வேண்டுகோள் அஞ்சல்.
4. **"கடவுள்களின் வகைகள் பற்றிய விளக்கம்"** - பெரியார் மாவட்டத்தில் உள்ள இராமகிருட்டிண ஞானயோகத் தபோவனத்து துறவிகளுக்கு குருதேவர் அவர்கள் எழுதிய அஞ்சல்.

# நம்மவர்கள் ஒவ்வொருவரையும் ஆற்றல் மிக்க தலைவர்களாக உருவாக்க வேண்டும்!

ஓம் தாத்தா கருவூரூர் துணை!

பொன்னேரி,
20-2-92.

அனுப்புநர்:-
ஞானச்சாரியார்,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரூர்,
3, என்.சி.ஓ. நகர், பொன்னேரி - 601204.

அருள்மிகு திரிபுரமெரித்த அவிர்சடைக் கடவுள் சன்னிதானம் பெ. சுப்பையா B.E.( D.M./ C.R.C., மயிலாடுதுறை, நாகை மாவட்டம்) அவர்கள் சமூகத்திற்கு அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார், பதினெண்சித்தர் மடாதிபதி, பீடாதிபதி வரையும் மடல்: **செயல்நலம் பாராட்டுத் திருவோலை**.

1. தங்களின் பல்வேறு அலுவல்களுக்கிடையில் இந்த இந்துமத ஆண்டு 43,73,093ஆம் ஆண்டு (1992) கும்பகோணம் மாசி மகாமகத் திருவிழாவில் நமது இ.ம.இ., இ.மு.க. பணிகள் மாபெரும் வெற்றி பெறுவதற்குரிய பணிகளை ஆற்றியமைக்கு அருளுலகத்தவர் அனைவரின் சார்பாகவும் தங்களுக்கு வாழ்த்துக்களையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம். என்றென்றைக்கும் தாங்கள் நல்ல உடல் நலத்தோடும், பொருள் வளத்தோடும், அதிகார வலுவோடும், ஆன்மீகப் பொலிவோடும் இ.ம.இ., இ.மு.க. இவை சார்ந்த அனைத்து வகையான

நிறுவன நிர்வாகங்கள் முதலிய அனைத்தும் வெற்றி பெறுவதற்காகப் பாடுபட வேண்டும் என்று வாழ்த்துகிறோம்.

2. நம்மிடையே உள்ளவர்கள் ஏறத்தாழ இயக்கமாக அல்லது ஒரு கட்சியாக அல்லது ஒரு கழகமாக அக்கறையோடும், ஆர்வத்தோடும் மற்றவர்களைத் தேடிச் சென்று காசையும், காலத்தையும், கருத்தையும் செலவிட்டு உழைக்கக் கூடிய பக்குவத்தைப் பெறவில்லை, பெறவில்லை, பெறவில்லை, பெறவே இல்லை. மேலும், நம்மவர்கள் பெரும்பாலும் தங்கள் தங்களின் சொந்தப் படிப்பாலோ, உடல் உழைப்பாலோ பொருளீட்டி வாழ்பவர்களாக இருப்பதால் மிக எளிமையாகத் தங்களுடைய தேவைகளையும், எதிர்பார்ப்புக்களையும் நம் கழகத்தைச் சேர்ந்த மற்றவர்களிடம் எடுத்துக் கூறிச் செயல்படத் தயாராய் இல்லை. இதற்கிடையில் சுயமரியாதை உணர்வு, அச்சம், கூச்சம், நாணம், தயக்கம், ஓரளவு சோம்பல், ஓரளவு செயல்படத் தெரியாமை, புரியாமை, ... முதலிய பல காரணங்களால் நம்மவர்கள் ஒன்றுபட்டு, ஒற்றுமையுடன் செயல்படுவது இயலாமல் போய்விட்டது. இப் பேருண்மையினை நாம் ஒவ்வொருவரும் நம்ப வேண்டும், புரிந்து கொள்ள வேண்டும்; பிறரை நம்ப வைக்க வேண்டும், பிறருக்குப் புரிய வைக்க வேண்டும்.

இதைத்தான் தங்களைப் போன்று முதன்மையான பொறுப்புக்களில் இருக்கக் கூடிய நம்மவர்கள்; நம்மவர்களைத் தனியாகச் சந்தித்தாலும் சரி, கூட்டமாகச் சந்தித்தாலும் சரி, தெளிவாக விளக்கியுரைக்க வேண்டும். சித்தர் கருவூரர் வார வழிபாட்டு மன்றம், சித்தர் கருவூரர் அருட்பணி விரிவாக்கத் திட்ட மையம், சித்தர் கருவூரர் அருட்கோட்டம் முதலிய இடங்களில் மேற்படி உண்மைகள் விளக்கி உரைக்கப்பட வேண்டும். அத்துடன் நமது எல்லாச் சுற்றுப்பயணங்களிலும், பயிற்சி முகாம்களிலும் நம்மவர்களுக்கு இப்பேருண்மைகள் விளக்கப்படுவதற்கு தாங்கள்தான் அன்புகூர்ந்து கிழக்கு மண்டல இ.மு.க. தலைவர் என்ற முறையில் முயற்சிகள்

மேற்கொள்ள வேண்டும். அத்துடன் தாங்கள் நமது இயக்கத்தில் மூத்த சன்னிதானங்களுள் ஒருவர் என்பதால் எல்லா சன்னிதானங்களுக்கும் விளக்க வேண்டும். ஏன் இப்படிக் கூறுகிறோம் என்பதை நீங்களே புரிந்து கொண்டிருப்பீர்கள்.

3. நமது இ.மு.க.வின் நிர்வாகக் குழுவின் அவைத் தலைவர் முதல் விசயாலயச் சோழன் த. பொன்னுசாமி அவர்கள் எடுத்துக் கொண்ட பெரும் முயற்சிகளும், வகுத்திட்ட செயல்திட்டங்களும் தஞ்சை மாவட்டத்திற்குள் மிகப் பெரிய விளம்பரத்தைத் தேடித் தந்திருக்கின்றன; தமிழகத்துக்குள் பரவலாக விரிந்த அளவில் இ.மு.க.விற்கு அறிமுகத்தைத் தேடித் தந்திருக்கின்றன. எனவே, இனிமேல்தான் நம்மவர்கள் அனைவருமே அளப்பரிய பொறுப்போடும், பொறுமையோடும், பேரார்வத்தோடும், அக்கறையோடும் இ.ம.இ., இ.மு.க. எனும் இருபெரும் அமைப்புக்களின் வரலாறுகளையும் விரிவாக விளக்கியுரைக்க வேண்டும், விளக்கியுரைக்க வேண்டும், விளக்கியுரைக்க வேண்டும். அப்பொழுதுதான் ஊர்தோறும் கிளைகள் தோன்றிட முடியும். பெருவாரியாக இளைஞர்களும், பெரியோர்களும், நமது அமைப்புக்களில் நேரடியாகப் பங்கு பெற்றிடுவார்கள்.

4. நாட்டு நடப்பில் நல்ல மொழிப் பற்று, இனப் பற்று, நாட்டுப் பற்று, தன்மான உணர்வு, தன்னம்பிக்கை உணர்வு, செயலார்வம், ... முதலிய அரிய பண்புநலன்களை பெற்றுள்ளவர்களில் பெரும்பாலானவர்கள் மத மறுப்பாளர்களாகவும், மத வெறுப்பாளர்களாகவும், மத எதிர்ப்பாளர்களாகவும், கடவுள் நம்பிக்கையே இல்லாத (அறியாமையாலும், புரியாமையாலும்) அப்பாவி நாத்திகர்களாகவுமே இருக்கிறார்கள், இருக்கிறார்கள், இருக்கிறார்கள். எனவே, நாம் கட்டாயமாக இப்படிப்பட்டவர்களின் நிறுவன நிர்வாகமாக விளங்குகின்ற திராவிடக் கழகத்தவர், பகுத்தறிவாளர், சீர்திருத்தவாதி, பொதுவுடமைவாதி, ... முதலியவர்களின் அந்தந்த வட்டார அமைப்புக்களோடு நேரடித்

தொடர்பு வளர்த்துக் கொண்டேயாக வேண்டும், வளர்த்துக் கொண்டேயாக வேண்டும், வளர்த்துக் கொண்டேயாக வேண்டும்.

அப்பொழுதுதான் நம் நாட்டில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளில் அன்னியர்களாலும், அன்னிய மதங்களாலும், அன்னிய மொழிகளாலும் ஏற்பட்டு விட்ட எல்லா வகையான சிதைவுகளும், சீரழிவுகளும், ஒற்றுமையின்மைகளும், தன்னம்பிக்கையின்மைகளும், ஒற்றுமை உணர்வின்மைகளும், பண்பாட்டுப் பிடிப்பின்மைகளும், நாகரிக நாட்டமின்மைகளும், மொழி உணர்வின்மைகளும், இலக்கிய உணர்வின்மைகளும்; முன்னோர்கள் வகுத்துச் சென்றுள்ள சாத்தர, சாத்திர, சாத்திற மரபுகளிலும் ஒழுகலாறுகளிலும் ஈடுபாடின்மைகளும் நிலையாக நீக்கப்பட்டிடும், நீக்கப்பட்டிடும், நீக்கப்பட்டிடும்.

இல்லாவிட்டால், இதுகாறும் நம் நாட்டில் தோன்றிட்ட பெரும்பாலான தனிப்பட்ட தலைவர்களும், சமயத் தலைவர்களும், சமுதாயத் தலைவர்களும், அரசியல் தலைவர்களும், கலையுலகத் தலைவர்களும், இலக்கிய உலகத் தலைவர்களும் எப்படியாவது தங்கள் தங்கள் காலத்துக்குள் பணம் சம்பாதிக்க வேண்டும், பதவிக்கு வர வேண்டும், புகழ் வர வேண்டும் என்ற குறுகிய கண்ணோட்டத்தில் நமது மொழியுணர்வு, இன உணர்வு, பண்பாட்டுணர்வு, நாகரிக உணர்வு, சமூக உணர்வு, வரலாற்று உணர்வு, இலக்கிய உணர்வு, கலை உணர்வு, ... முதலிய உணர்வுகளையெல்லாம் கீரையைப் பாத்தியிலிருந்து வேரோடு பிடுங்குவது போல்; தங்களால் தங்கள் காலத்தில் வளர்க்கப்பட்ட மேற்படி உணர்வுகள் அனைத்தையும் வேரோடு பறித்தெடுத்து தங்களுக்கு உணவாக்கிக் கொண்டு விட்டார்கள்.

எனவேதான், நம் நாட்டைப் பொறுத்தவரை எந்தத் துறையைச் சார்ந்த தலைவர்களும் சரி, எந்தத் துறையைச் சேர்ந்த நிறுவன நிர்வாக அமைப்புக்களும் சரி, மிகமிகக் குறுகிய கால அற்பமான வாழ்க்கையையே அல்லது வாழ்வியலையே அல்லது வாழ்நாளையே

அல்லது ஆயுளையே அல்லது அதிகாரத்தையே அல்லது மதிப்பையே பெறுகின்ற கேவலமான அவலமான இழிவான வரலாறுதான் தொடர்கிறது! தொடர்கிறது! தொடர்கிறது! இத்தகைய அழிநிலை, பழிநிலை, இழிநிலை நமது எந்தவொரு நிறுவன நிர்வாக அமைப்புக்கும் ஏற்படக் கூடாது, ஏற்படக் கூடாது, ஏற்படக் கூடாது. இப் பேருண்மையை நம்மவர் அனைவரும் புரிந்தும் பிறருக்குப் புரியவைத்தும் செயல்பட வேண்டும், செயல்பட வேண்டும், செயல்பட வேண்டும், செயல்பட்டேயாக வேண்டும்.

5. நமது இ.மு.க.வும், இ.ம.இ.யும் தான் நமது முன்னோர்களும், சான்றோர்களும், ஆன்றோர்களும், முனிவர்களும், இருடிகளும், மகான்களும் நமது நாட்டுக்கு உரியது என்று உருவாக்கியுள்ள சாத்தர, சாத்திர, சாத்திறங்களின் கருத்துக்களையும், செயல்நிலைகளையும் கிராமம் முதல் சிற்றூர், பேரூர், மாநகரம் என்ற வேறுபாடின்றி எல்லோருக்கும் கற்றுக் கொடுக்க வேண்டும். அதில் சித்த மருத்துவம், சித்தர் சமையல் முறை, உணவு முறை, உடை முறை, உடற்பயிற்சிகள், போர்க்கலைகள், இசைக்கருவிகள், கூத்து, நாடகம், நாட்டியம் முதலியவைகள், இசை, சித்திரம், சிற்பம், கட்டிடக் கலை, மதம் சார்ந்த பூசைமுறைகள், ஓகாசன யோகாசனக் கலைகள், ஞானக்காட்சி, அருட்கணிப்பு, பரிகாரம் செய்யும் முறைகள், பத்தி சத்தி சித்தி முத்திகளுக்குரிய ஓகாசன யோகாசனக் கலைகள், பதினெண் மேல்கணக்குகள், பதினெண் கீழ்க்கணக்குகள், பதினெண் நடுக்கணக்குகள் எனும் மூன்று வகைப்பட்ட இலக்கியங்கள், (உலகியல் இலக்கியங்கள், நீதி இலக்கியங்கள், அருளுலக இலக்கியங்கள்) ... முதலியவைகளையெல்லாம் கூடுமானவரை நன்கு ஆய்ந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சித்தரடியான்கள், சித்தரடியாள்கள், சித்தரடியார்கள் முதலியோர்களின் உள்ளங்களையும், இல்லங்களையும் மேற்படி அனைத்தின் விதைப் பண்ணைகளாகவும், நாற்றுப் பண்ணைகளாகவும் தயாரித்துத்தான்

நம் நாட்டுப் பொதுமக்களிடம் பரப்ப வேண்டும். இல்லாவிட்டால், நேர்மாறான மிகப் பெரிய பாதிப்புக்கள்தான் ஏற்பட்டுவிடும்.

6. இப்படி யாம் எழுதுவதற்குக் காரணம் நாட்டு மக்களில் பெரும்பாலானவர்கள் கள்ளங்கபடமற்ற அப்பாவிகளாகவும், ஏமாளிகளாகவும், எதார்த்த வாதிகளாகவும், எந்த அன்னியர் வந்தாலும் அவர்களிடம் கூலிகளாகவும், எடுபிடிகளாகவும், கங்காணிகளாகவும் வாழத் தயாராக இருக்கும் கூலி மனப்பான்மை உடையவர்களாகவுமே இருக்கிறார்கள். எனவேதான், நம்மவர்கள் என்றென்றைக்குமே புதியதோர் சமய சமுதாய அரசியல் கட்டமைப்புக்களை உருவாக்க முடியாத நிலை தொடர்ந்து நிலவி வருகிறது. பெரும்பாலான நமது தலைவர்கள் கண்மூடித் தனமான பொருள் வெறி, பதவி வெறி, புகழ் வெறி, தான் என்ற அகம்பாவம், ஆணவம், வம்பு, வீம்புப் பண்புகளை உடையவர்களாகவே இருப்பதுதான் கடந்த சில ஆயிரம் ஆண்டுகளாக நிகழ்ந்து வருகிறது.

அதாவது, **நமது பெரும்பாலான தலைவர்கள் தொன்மையான பழம் பெரும் பண்பாட்டுப் பாரம்பரிய வீரிய வாரிசுகளாக இல்லை**. எனவே, **நாம் நமக்குக் கிடைக்கக் கூடிய ஒவ்வொருவரையும் மெய்யாகவே பண்பாட்டுப் பிடிப்பும், நாத்திகப் பிடிப்பும், மொழி உணர்வும், இலக்கிய அறிவும், வரலாற்றறிவும், வரலாற்றுப் பெருமித உணர்வும், இன உணர்வும், நாட்டுணர்வும் ஊற்றெடுக்கக் கூடிய ஆற்றல் மிக்க தலைவர்களாகவே உருவாக்க வேண்டும்! ஆற்றல் மிக்க தலைவர்களாகவே உருவாக்க வேண்டும்! ஆற்றல் மிக்க தலைவர்களாகவே உருவாக்க வேண்டும்! அப்பொழுதுதான் நமது வளர்ச்சி மெல்ல நிகழ்ந்தாலும்; நமது நிறுவன நிர்வாகங்கள் அனைத்தும் நல்ல வலிவையும், வளத்தையும், பொலிவையும், விழிப்பையும், செழிப்பையும் பெற்றிடும்! பெற்றிடும்! பெற்றிடும்!**

7. அன்பு கூர்ந்து **<u>யாம் இந்துவேதம் எழுதிக் கொண்டிருக்கின்ற இன்றைய நிலையில்</u>** தங்களுக்கு எழுதியுள்ள இந்த நெடிய அஞ்சலுக்கும்; நமது கிழக்கு மண்டல அமைப்பாளர் கி. மகாலிங்கம் அவர்களுக்கு எழுதியுள்ள நெடிய அஞ்சலுக்கும்; இப்பொழுது நமக்கு கும்பகோணம் மாசிமக விழாவை முன்னிட்டு அறிமுகமாகி உள்ள Dr. M. சுடாலின் (47, திருமஞ்சனத் தெரு, தாராசுரம், கும்பகோணம்) அவர்களுக்கு எழுதியுள்ள நெடிய அஞ்சலுக்கும் குறைந்தது 15 முதல் 20 Xerox நகல்கள் எடுங்கள். ஒவ்வொன்றிலும் குறைந்தது 6 நகல்களாவது தலைமைப்பீடத்திற்கு அனுப்பி வையுங்கள். மீதியுள்ளவற்றை தங்கள் மண்டலத்திலும், மற்ற மண்டலங்களிலும் உள்ள முதன்மையானவர்களுக்கு எல்லாம் அனுப்பி வையுங்கள். சேலம் மாவட்டம் க.ப.சி.அ.வில் இந்த மூன்று அஞ்சல்களும் இடம் பெற வேண்டும். இந்தக் குறிப்பை எழுதி இராசை கங்காதரக் குமாருக்கும் (17-A, கவரைத் தெரு, இராசிபுரம் - 637408), வேம்பை ப. கோவிந்தராசுக்கும் (2/108, பண்டரி கோயில் தெரு, வேம்படிதாளம், சேலம் - 637504), இ.மு.க. நிர்வாகக் குழு அவைத் தலைவர் முதல் விசயாலயச் சோழன் த. பொன்னுசாமி அவர்களுக்கும் (10, டிரசுடுபாக்கம், மந்தைவெளி, சென்னை - 28) கட்டாயமாக **அனுப்பி வையுங்கள். அவசியம், அவசியம், அவசியம்**.

8. முதலில் உங்களுக்கு வருகின்ற இந்த அஞ்சலுக்கு Xerox நகல் எடுத்துக் கொண்டு தாராசுரம் Dr. M. சுடாலினைப் பார்த்து இந்த நகலை அவருக்குப் படித்துக் காட்டி அவருக்கு Xerox நகல் ஒன்று கொடுத்துவிட்டு; முறையே அவர் அஞ்சலுக்கும், மகாலிங்கம் அஞ்சலுக்கும் நகல் எடுங்கள்.

<u>குறிப்பு</u>:- தாங்களோ, யார் மூலமோ இந்த அஞ்சலுக்கும் முயன்று பேனா நகல் எழுதி Xerox நகல் எடுத்தால்தான் சிறப்பாக இருக்கும். ஏனெனில், கார்பன் நகலில் தெளிவு இருக்காது.

9. உடனடியாக டாக்டர் சுடாலின் மூலமும், தாங்கள் அறிந்த தஞ்சை மாவட்ட திராவிடக் கழகத்தவர் மூலமும் கும்பகோணம், மாயவரம், தஞ்சாவூர், (முடிந்தால் திருவாரூர், பட்டுக்கோட்டை, நன்னிலம்) முதலிய பெரிய ஊர்களில் உள்ள திராவிடக் கழகத்தவர், பகுத்தறிவாளர், நாத்திகர், தமிழ்ப் புலவர்கள், முடிந்தால் RSS, VHP, ... உறுப்பினர்களையும், ஆதரவாளர்களையும் ஒன்றுதிரட்டி ஆங்காங்கே ஏதேனும் ஒரு வீட்டில் அல்லது பொதுக் கூடத்தில் (Hall Meetings within the four walls) யாம் சந்தித்து வினு விடை, கேள்வி பதில், நேருக்கு நேர், உடனுக்குடன் கருத்து விளக்கம் தருகின்ற நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யுங்கள். இதற்காக டாக்டர் சுடாலின், கி. மகாலிங்கம், மாநாட்டுப் பந்தல்காரர் பக்கிரிசாமி, பெரும்புலியூர் நக்கீரன், ... முதலியவர்களையெல்லாம் தொடர்பு கொண்டு மின்னல் வேகத்தில் செயல்படுங்கள். மார்ச்சு முதல் வாரத்தில் இந்த நிகழ்ச்சிகள் அனைத்தும் நடந்தாக வேண்டும். அவசரம், அவசரம், அவசரம்.

உடன் பதில்.

**அன்பு**
**தலைவர், குருதேவர்,**
**ஞானத்தந்தை,**
**அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார்,**
**20-2-92.**

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்

**அஞ்சல் ஓலைநாயகம்:** அருள்மிகு பச்சைமலை வீரப்பட பத்திரகாளி சன்னிதானம் வேம்படிதாளம் இரா.சீனிவாசன், 20/2/92.

**//உண்மை நகல்//**
**//இதன் மூல நகல்: சித்தரடியார் திரு இரா. சீனிவாசன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# நமது நாட்டில் உள்ள அமைப்புக்கள் அனைத்தையும் பற்றி மறுசிந்தனை செய்வதற்காக அழைப்பு.

20-2-92.

பெறுநர்:-

உயர்திரு தமிழினச் சிந்தனையாளர் Dr. M. சுடாலின் அவர்கள்,
எண்: 45A, திருமஞ்சன வீதி, தாராசுரம், கும்பகோணம்.

அனுப்புநர்:-

இந்து வேதத்தை இம்மண்ணுலகுக்கு வழங்கிய **பதினெண்சித்தர் மடத்தின் மடாதிபதி**;

இந்துமதத்தை இம்மண்ணுலகுக்கு ஏற்றவாறு இந்து வேதத்திலிருந்து உருவாக்கிக் கொடுத்த **பதினெண்சித்தர் பீடத்தின் பீடாதிபதி**;

அண்டபேரண்ட அருளுலக ஆட்சிமொழியான அருளூறு அமுதத் **தெய்வீகச் செந்தமிழ் மொழியின் தலைவர்**;

இம்மண்ணுலக மொழிகள் அனைத்துக்கும், இனங்கள் அனைத்துக்கும் நன்மை பயக்கக் கூடிய தமிழில் உள்ள **உலகப் பொதுவான இந்துவேதத்தின் இந்துவேத நாயகம்**;

தமிழர்கள்தான் அருளுலகத்திற்கு மூலவர்கள், காவலர்கள், வாரிசுகள், வித்துக்கள் என்ற பேருண்மையை நிலைநாட்டும் **இந்துமதத்தின் இந்துமதத் தந்தை**;

தமிழர்களின் உள்ளங்களும், இல்லங்களும்தான் உலகம் முழுவதற்கும் தேவையான அருளுலக வித்துக்களையும், நாற்றுக்களையும் தயாரித்துத் தரும் விதைப் பண்ணைகள், நாற்றுப் பண்ணைகள் என்ற பேருண்மையை அநுபவப் பூர்வமாக விளக்கிடும் **இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் பாரம்பரியத் தலைவர்**;

இந்துவேதம் பிழைக்கவும், இந்துமதம் தழைக்கவும் வேண்டுமானால் தமிழ்மொழி, தமிழர், தமிழ்நாடு எனும் மூன்றும் தனக்கே உரிய உரிமையோடும், பெருமையோடும் வாழக் கூடிய வாழ்வைப் பெற வேண்டும் என்ற பேருண்மையினைத் தமிழருக்கும், உலகுக்கும் உணர்த்திட முற்பட்டிருக்கும் **இந்து முன்னேற்றக் கழகத்தின் பாரம்பரியத் தலைவர்**;

தமிழர்கள் அன்னிய மொழிகளாலும், அன்னிய மொழியினர்களாலும், அன்னிய மதத்தவர்களாலும், பல்வேறு வகையான அரசியல் கட்சிகளாலும், குறிப்பிட்ட சில சமய சமுதாய இலக்கிய கலைத் துறைக் கட்சிகளாலும், ... என்றைக்குமே ஒன்றுபட முடியாதபடி துண்டு துண்டாக வெட்டப்பட்டுக் கிடக்கும் தமிழர்களைப் பதினெண்சித்தர்களுடைய சாத்தர, சாத்திர, சாத்திறங்களால்தான் ஒன்றுபடுத்த முடியும், ஒற்றுமைப்படுத்த முடியும் என்ற பேருண்மையினை ஏட்டறிவாகவும், பட்டறிவாகவும் வழங்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் **குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்**;

அருளும், மருளுமாக மனிதர்கள் மீது வந்து இறங்கி ஆடக்கூடிய கடவுள்களாகவும், குருதிப்பலியையும், இறைச்சி உணவையும் மிகுந்த விருப்பத்தோடு ஏற்கக்கூடிய கடவுள்களாகவும் இருக்கின்ற கடவுள்களின் கோயில்களுக்கும்; இவற்றை விரும்பாது மரக்கறி உணவையே விரும்புகின்ற கடவுள்களை உடைய கோயில்களுக்கும் உயிர்ப்புச் சத்திப் பூசைகளையும், புத்துயிர்ப்புச் சத்திப் பூசைகளையும் செய்து தரக்கூடிய வல்லவர்களை உருவாக்கும் **அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார், குவலய குருபீடம், குருதேவர்**;

விடுத்துக் கொள்ளும் **<u>செயல்நலம் பாராட்டுத் திருவோலை</u>**.

1) பேரன்பிற்கும், பெருமதிப்பிற்கும் உரிய நண்பரே! தோழரே! தமிழினத் தொண்டரே! பெருமதிப்பிற்குரிய டாக்டர் எம்.சுடாலின் அவர்களே! தங்களுக்கும், தங்கள் குடும்பத்தாருக்கும், உற்றூர் உறவினருக்கும் தாங்கள் சார்ந்துள்ள கழகத்தவருக்கும், தங்களுடைய ஏந்தாளர்களுக்கும் எல்லா நலங்களும், வளங்களும், வெற்றிகளும், நிறைவும், நிம்மதியும் கிடைக்கட்டும்! கிடைக்கட்டும்! கிடைக்கட்டும்! என்று முதற்கண் வாழ்த்துகிறோம்!

2) உழுவலன்ப! தாங்கள் குருபீடத்திற்கும், குருபீடம் சார்ந்த இயக்கத்தவர்களுக்கும், கழகத்தவர்களுக்கும் மிகப்பெரிய அளவில் எல்லா வகையான ஏந்துகளையும், துணைகளையும் நல்கி மாசி மாத மகாமகத் திருவிழாவில் எமது பணி அணி பெறச் செய்தமைக்கு நன்றியையும், வாழ்த்தையும், பாராட்டையும் மீண்டும் மீண்டும் இந்த அஞ்சல் வழியாகத் தெரிவித்துக் கொள்கிறோம். நமது நாடும் ஏடும் நலம் பெறத் தாங்கள் எமது வீடு தேடி வந்தாலும் சரி அல்லது யாம் தங்கள் வீடு தேடி வந்தாலும் சரி விரைவில் நமது சந்திப்பு நிகழ்ந்தேயாக வேண்டும். அதுதான் நமது இன்றைய மக்களுக்கும், நாளைய வருங்காலத் தலைமுறையினருக்கும் முறையான பயன்களை நிறைவாக நல்கி முழுமையான பாதுகாப்புக்களையும், உரிமைகளையும், பெருமைகளையும் ஈட்டித் தரும், ஈட்டித் தரும், ஈட்டித் தரும்.

3) பகுத்தறிவுப் பாசறை வீர! அன்பு சுடாலினே! எந்த ஒரு கட்சியோ அல்லது கழகமோ அல்லது இயக்கமோ தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு என்ற நான்கும் நன்கு வடிவப்படுவதற்கும், நிறைவான நடைமுறைகளைப் பெறுவதற்கும், தன்னம்பிக்கை நிறைந்த, தன்மான உணர்வு ஊற்றெடுக்கப் படுவதற்கும் உரிய வழிவகைகளை நமது முன்னோர்கள் வழங்கிச் சென்றுள்ள ஏட்டுலகின் அடிப்படையிலும், நாட்டு நடப்புகளின்

அடிப்படையிலும் ஆராய்ச்சி செய்யத் தயாராகவில்லை! தயாராகவில்லை!! தயாராகவில்லை!!! தயாராகவே இல்லை!!!!

அதாவது, எல்லா வகையான நிறுவன நிர்வாகங்களும் (கட்சிகள், கழகங்கள், இயக்கங்கள், சபைகள்) தங்களை எப்படி வளர்த்துக் கொள்வது?! அல்லது தங்களுடைய அமைப்பை எப்படிச் சிதையாமல் காப்பாற்றுவது?! என்ற வெறிப் போக்கில் குறுகிய செயல்திட்டங்களை வகுத்துக் கொண்டு கண்மூடித் தனமாகவே செயல்பட்டு வருகின்றன. மேலும், **நம் நாட்டிலுள்ள ஒவ்வொரு பொது அமைப்பும் மற்ற அமைப்புக்களைத் தங்களுடைய எதிரிகளாகவும், தங்களுடைய வளர்ச்சிக்குத் தடைகளாகவும், தங்களுடைய வளவாழ்விற்கு உரிய சாப்பாடாகவும் நினைத்தே எந்நேரமும் மற்ற அமைப்புக்களோடு போட்டா போட்டிகளையும், சண்டை சச்சரவுகளையும் வளர்த்துக் கொண்டு இருக்கின்றன**.

அதாவது, நம் நாட்டில் உள்ள ஒவ்வொரு பொது அமைப்பும் மற்ற அமைப்புக்களைச் சிதைத்துச் சீரழிக்கவும்; முடிந்தால் விழுங்கி ஏப்பம் விடவும்தான் முயற்சித்துக் கொண்டிருக்கின்றன, முயற்சித்துக் கொண்டிருக்கின்றன, முயற்சித்துக் கொண்டிருக்கின்றன.

எனவேதான், நமது நாட்டில் உள்ள சமய, சமுதாய, கலை, இலக்கிய, அரசியல் அமைப்புக்கள் அனைத்தையும் பற்றி மறுசிந்தனை செய்வதற்காக அழைப்பு விடுத்துக் கொண்டிருக்கிறோம் யாம். ஆனால், சிந்தனை அல்லது மறுசிந்தனை என்ற பேச்சிற்கே இடமின்றித்தான் ஏறத்தாழ எல்லா அமைப்புக்களின் தலைவர்களும் இருக்கின்றார்கள், இருக்கின்றார்கள், இருக்கின்றார்கள்.

4) இப்படிப்பட்ட வியப்பான, விநோதமான, விபரீதமான, வேதனைமிகு சூழ்நிலைகள் நெடுங்காலமாக இத் திருநாட்டில் நிலவி வருகின்ற காரணத்தினால்தான்; எமது இமாலய முயற்சிகளால் கூட இத் தாயக மக்களுக்கு நன்மை செய்ய முடியவில்லை. எனவேதான், இப்பொழுது யாம்; மாவட்டம் தோறும் சிற்றூர், பேரூர் என்ற

வேறுபாடின்றி எந்த ஊரில் அழைப்பு கிடைத்தாலும் அந்தந்த ஊர்களுக்குச் சென்று தங்கி அனைத்துத் துறைகளிலும் உள்ள இருள்களை அகற்றுவதற்காக அனைத்து வகைப்பட்ட அமைப்புக்களின் உறுப்பினர்களையும், பொதுமக்களையும் அழைத்து, **'கருத்துப் பரிமாற்றச் சிந்தனை அரங்கம்'** என்ற பெயரில் பயிற்சி முகாம்கள் நடத்தி வருகின்றோம்.

இதில் எல்லாத் துறையினருக்கும் நேருக்கு நேராக, உடனுக்குடனாக உரிய பதில்களைக் கூறி அவரவர்களுடைய கருத்துக்களையும், சிந்தனைகளையும், உணர்வுகளையும் கேட்டுச் சிந்தனை செய்து வருகிறோம். எமது முயற்சியாலும், தங்களைப் போன்றோர்களின் துணையாலும் உரிய பயன்கள் விரிந்த அளவில் விரைவாக நிகழ்ந்திடும் என்று நம்புகிறோம், எதிர்பார்க்கிறோம். எனவேதான், தங்களைப் பற்றிக் கேள்விப் பட்டவுடன் இந்த விரிவான அஞ்சலை விரைவாக எழுதி அனுப்புகிறோம். இதன்மூலம், உரிய பயன் விளைய வேண்டும்?! ...

5) அன்பு நண்ப! சிந்தனைச் செல்வ! நம் நாட்டின் இலக்கியச் சொற்பொழிவுகள், பேருரைப் பெருவிழாக்கள், பட்டிமன்றங்கள், இலக்கிய விழாக்கள், கலை விழாக்கள், அரசியல் கூட்டங்கள், அரசியல் மாநாடுகள், தேர்த் திருவிழா சொற்பொழிவுகள், புராண இதிகாசச் சொற்பொழிவுகள், திருமடங்களின் ஆன்மீகப் பெருவிழா சொற்பொழிவுகள், ... என்று பல தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கின்றன.

ஆனால், நமது முன்னோர்கள் வகுத்துச் சென்ற மரபுகளுக்கும், ஒழுகலாறுகளுக்கும், சாத்தர சாத்திர சாத்திறச் சம்பிறதாயங்களுக்கும் ஏற்ப நமக்குள் தன்னம்பிக்கையோ, தன்மானப் பிடிப்போ, தன்னுரிமை உணர்வோ, ஒற்றுமையுணர்வோ, சமூகக் கட்டுப்பாடோ, நாட்டுப் பிடிப்போ, நாட்டுப் பற்றோ புதிதாகத் துளிர் விடவில்லை, புதிதாகத் துளிர் விடவில்லை, புதிதாகத் துளிர் விடவில்லை; புதிதாக முளை விடவில்லை, புதிதாக முளை விடவில்லை, புதிதாக முளை விடவில்லை.

எனவே, இந்த நாட்டின் நலம் குறித்து தங்களைப் போன்று அவ்வப்போது எங்களுக்கு அறிமுகமாகக் கூடிய நண்பர்களின் மூலம் மிகப்பெரிய முயற்சிகளைச் செய்து வருகிறோம். இதன்படி, குடந்தை, மாயவரம், திருவாரூர், தஞ்சாவூர், ... முதலிய ஊர்களில் க.ப.சி.அ. ஏதேனும் ஓர் அறையில் அல்லது கூடத்தில் நிகழ்த்த விரும்புகிறோம் யாம்.

தாங்கள் தங்களால் முடிந்தவரை பல்வேறு வகையான அமைப்புக்களைச் சேர்ந்தவர்களையும், பொதுவாழ்வில் நாட்டமுடையவர்களையும், அறிவுப்-பசி உள்ளவர்களையும் ஒன்றுதிரட்டி இந்த எமது ஆய்வுக் கூட்டங்கள், பயிற்சி முகாம்கள் வெற்றி பெறுவதற்கு உதவ வேண்டும். சமயம், சமுதாயம், அரசியல், கலை, இலக்கியம் முதலிய துறைகளில் மறுமலர்ச்சி ஏற்பட புத்துணர்ச்சி ஊற்றுப் பெருக்கெடுத்து ஓடிட உங்களால் இயன்ற உதவிகளை முழுமையாகச் செய்துதர வேண்டும், முழுமையாகச் செய்துதர வேண்டும், முழுமையாகச் செய்துதர வேண்டும்.

<u>உலகம் முழுவதுமுள்ள எல்லா மொழிகளும், இனங்களும், நாடுகளும் முழுமையான விடுதலை வாழ்வு பெற வேண்டும்</u> என்ற தத்துவத்தை வழங்கும் பதினெண்சித்தர்களின் பெயரால் தங்களுக்கு இந்தப் பதில் எழுதப்படுகிறது.

நாளை நமதே! வெற்றி நமதே!
உடனே செயலாக்கம் தேவை!

**ஞானத்தந்தை,**
**அந்தணர் அண்ணல்,**
**ஞானாச்சாரியார்,**
**20-2-92.**

**//உண்மை நகல்//**

//இதன் மூலநகல்: சித்தரடியார் திரு இரா.சீனிவாசன் அவர்களின் கையெழுத்திலும் வேறு ஒருவர் கையெழுத்திலுமாக இருந்தது.//

# மெய்யான தமிழ் உணர்வுடைய மாவீரருக்கு அறிவிப்பு வேண்டுகோள்

22-2-92.

பெறுநர்:-

அருள்மிகு கபிலர் எம்.ஏ., எம்.ஃபில்.,
மாவட்டத் தமிழாய்வு அலுவலர்,
தமிழ் வளர்ச்சித் துறை,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
திண்டுக்கல்.

1) இந்த உலகம் உருண்டை நீர்க்கோளமாக இருந்தபோது இந்த நீர்ப்பரப்புக்குள் இருந்து கற்பாறைகளும், குன்றுகளும், மலைகளும் வெளியே தோன்றி மணல் தோன்ருதிருந்த காலத்தில் அண்ட-பேரண்டங்களிலிருந்து வந்திட்ட பதினெண்சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புக்களும், நாற்பத்தெட்டு வகைக் கடவுள்களும், நாற்பத்தெட்டு வகைப்பட்ட வழிபடுநிலையினர்களும் பேசிய மொழி அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழி. எனவேதான் இம்மொழி “கல் தோன்றி மண் தோன்ருக் காலத்தே தோன்றிய மூத்த தமிழ் மொழி” எனப் பாராட்டப்படுகிறது. இது மண்ணுலகில் தோன்றிய மொழியல்ல.

இந்த மொழி பதினெண்சித்தர்களால் ***'அண்டபேரண்ட அருளுலக ஆட்சிமொழியான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழி*** எனப் பாராட்டப்படுகிறது. எனவேதான், இந்தத் தெய்வீகச் செந்தமிழ் மொழி திருநாவுக்கரசரை கொடிய நஞ்சும், கொல் களிறும், சுண்ணும்புக் காலவாய் நெருப்பும், கடலும் இரும்புச் சங்கிலியும் ஏதும் செய்யாமல் காப்பாற்றியது. இந்தத் தமிழ்தான், திருஞானசம்பந்தர் மூலம் ஆற்று நீரை எதிர்த்தது; நெருப்பில் எரியாமல் நின்றது; நெருப்பில் எரிந்து சாம்பலாகி விட்ட பூம்பாவையை மீண்டும் உயிர்ப்பித்தது. இந்தத் தமிழ்தான் சுந்தரர் மூலம் முதலையுண்ட பாலகனை மீண்டும் வரவழைத்தது. இராமலிங்க அடிகள், அருணகிரியார், பட்டினத்தார், தாயுமானவர் முதலியோர்களின் அருள் வாக்காகி அருட்பயிர் தழைக்கச் செய்தது.

இப்படிப்பட்ட தமிழ்மொழியில்தான் இன்றைக்கு 1992க்கு முன்னல் அதாவது 43,73,093 ஆண்டுகளுக்கு முன்னல் இந்துவேதத்தின் 108 பூசைமொழி நூல்களும், 48 பூசைவிதி நூல்களும், 96 தத்துவ நூல்களும், 144 செயல்சித்தாந்த நூல்களும், இந்துமதத்திற்குரிய 36 நூல்களும் வழங்கப்பட்டன, வழங்கப்பட்டன, வழங்கப்பட்டன; அருளப்பட்டன, அருளப்பட்டன, அருளப்பட்டன என்ற பேருண்மைகளை இம்மண்ணுலகுக்கு ஏட்டறிவாகவும், பட்டறிவாகவும் விளக்குவதற்காகத் தோற்றுவித்திருப்பதுதான் **இந்து முன்னேற்றக் கழகம்**.

இந்த இ.மு.க.வின் பாரம்பரியத் தலைவர், குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறூர் அவர்கள் தமிழ்மொழித் தலைவராகவும், இந்துவேத நாயகமாகவும், இந்துவேத பீடமாகவும், இந்துவேதத்தை இம்மண்ணுலகுக்கு வழங்கிய பதினெண்சித்தர் மடத்தின் மடாதிபதியாகவும், இந்துமதத்தை இம்மண்ணுலகில் தோற்றுவித்த பதினெண்சித்தர் பீடத்தின் பீடாதிபதியாகவும், இந்துமதத் தந்தையாகவும்,

குருகுலம், தருகுலம், திருகுலம், கருகுலம் இவைகளை அமைத்துச் செயல்படும் போதகராகவும், ஞான ஆசிரியராகவும், ஞான வேந்தராகவும், நிறையக்ஞராகவும், கருவறை மூலவர்களின் அம்மையப்பராகவும், தமிழர்கள்தான் அருளுலகின் மூலவர்கள், காவலர்கள், வாரிசுகள், நாயகங்கள் என்ற பேருண்மைகளை விளக்கும் அருளாசானுகவும், தமிழ்மொழியில்தான் அனைத்து வகைப்பட்ட பத்தி சத்தி சித்தி முத்திகளையும் தரக்கூடிய காயந்திரி மந்தரங்கள், மந்திரங்கள், மந்திறங்கள், மாந்தரங்கள், மாந்தரீகங்கள் எனும் ஐந்தும் இருக்கின்றன என்பதைக் கூறி; இட்டும் தொட்டும் சுட்டியும் அருள் வழங்கக் கூடிய அருட்கொடை வள்ளலாக தமிழரின் பெருமை சாற்றும் விண்ணுயர்ந்த தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினேராவது பதினெண்சித்தர் பீடாதிபதி ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்களின் மகள் வயிற்றுப் பேரனுகவும், அருள் வாரிசாகவும் செயல்படத் துவங்கியுள்ளார்.

2) எனவேதான், '**தமிழ் நெஞ்சினன்**' ந. கபிலர் என்ற உங்களுடைய கையெழுத்திட்ட தங்களால் எழுதப்பட்ட 19-2-92 நாளிட்ட உள்நாட்டு அஞ்சலைக் கண்டவுடன் ஞானவள்ளல், ஞானத் தந்தை, ஞானுச்சாரியார், ஞானவேந்தர், அந்தணர் அண்ணல், தமிழ்மொழி இன மத விடுதலைத் தலைவர், இ.மு.க.வின் பாரம்பரியத் தலைவர், குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் அவர்கள் மட்டற்ற மகிழ்ச்சியோடு திருவாய் மொழிந்தருளிய இத் திருவோலை தங்களை நாடி வருகிறது. வாழ்க நீவிர்! வளர்க நீவிர்! நுமது தமிழ் நெஞ்சம், தமிழ்ச் சிந்தை, தமிழுணர்வு, தமிழ் எண்ணம், ... முதலியவை பாலைவனச் சோலையாக, அடர்காட்டிடைச் சந்தனமாக, கடலில் பெய்த மழையாக, பகற்கனவாக மாறிவிட வேண்டாம், மாறிவிட வேண்டாம், மாறிவிட வேண்டாம். இந்த அறிவிப்பு வேண்டுகோளை நீள நினைத்து, ஆழச் சிந்தித்துப் புரிந்தால் புரிந்து;

புரியாவிட்டால் நேரிலோ, அஞ்சலிலோ தொடர்பு கொண்டு செயலுக்கு வருக தமிழ் மறவனே! அறவோனே!

3) மெய்யான தமிழ் உணர்வுடைய மாவீரரே! இந்த இருபதாம் நூற்றுண்டில் தமிழ் இன உணர்வு, மொழி உணர்வு, நாட்டுணர்வு, சமய உணர்வு, சமுதாய உணர்வு முதலிய அனைத்து உணர்வுகளும் பாரம்பரியமற்ற, பண்பாட்டுப் பிடிப்பற்ற, மெய்யான மொழி இன உணர்வற்ற, தன்னல வெறிபிடித்த அரசியல்வாதிகளால் குரங்கு கைப் பூமாலை போல, யானை புகுந்த கரும்புக் காடு போல பாழாகி விட்டன, பாழடிக்கப்பட்டு விட்டன. அதனால், தமிழகத்தில் தமிழ்மொழியின் பெயராலோ, தமிழினத்தின் பெயராலோ, தமிழ் நாட்டின் பெயராலோ, ... எந்த ஒரு சிறு கூட்டத்தையும் திரட்ட முடியாது, திரட்ட முடியாது, திரட்ட முடியாது, திரட்ட முடியவே முடியாது. இன்னும் சொல்லப் போனால், பெரிய மகாநாடோ அல்லது ஒரு சின்னஞ்சிறு கூட்டமோ நடத்த முடியாது, நடத்த முடியாது, நடத்த முடியாது, நடத்தவே முடியாது.

அதாவது ஏறத்தாழ எல்லாத் தமிழருமே தமிழ்மொழியாவது!? தமிழினமாவது!? தமிழ்நாடாவது!? தமிழர் வரலாறுவது!? தமிழ்ப் பண்பாடாவது!? தமிழ் நாகரிகமாவது!? தமிழர் மதமாவது!? ... என்று எதுவுமே இல்லை, எல்லாமே பொய் பித்தலாட்டம், ... என்று எண்ணவும், பேசவும் தயாராகி விட்டார்கள், இதற்கெல்லாம் மேலாக, தமிழனுக்குத் தலைமை தாங்கவோ, வழிகாட்டவோ, வழித்துணையாகவோ இருப்பதற்குத் தமிழனில் யாரும் இல்லை. தமிழன் எப்பொழுதும் அன்னியர்களின் கூலியாக, வேலியாக, எடுபிடியாக, சேவகனாக, காவடியாக, பாதுகை தாங்கியாக, கங்காணியாக, அடிமையாக வாழக் கூடிய போலிதான், காலிதான் என்ற கருத்தோட்டம் தமிழருக்கும், தமிழரல்லாத அன்னியருக்கும் ஏற்பட்டு விட்டது, ஏற்பட்டு விட்டது, ஏற்பட்டு விட்டது.

இதை மாற்றுவதற்கு முயலக்கூடிய வாய்ச் சொல் வீரர்கள் கூட ஏறத்தாழ நம் நாட்டில் தோன்றவில்லை, தோன்றவில்லை, தோன்றவில்லை, தோன்றவே இல்லை. இப்பேருண்மையினைத் தமிழர்களுக்கிடையில் விளக்கிடுவதற்காகத் தோற்றுவிக்கப்பட்டிருக்கக் கூடிய இயக்கம்தான், திருச்சபைதான், தமிழ்ச்சங்கம்தான், அருட்படைதான் இந்து முன்னேற்றக் கழகம். இ.மு.க. I.M.K. இதைத் தமிழர்கள் புரிந்து கொள்வார்களா?! புரிந்து கொண்டு இதில் வந்து சேருவார்களா?!

4) தமிழ் நாட்டில், தமிழர்களுக்கிடையில் உண்மையிலேயே தமிழ் வாழ்க! என்று முழக்கமிடுவதற்கோ; தமிழிலக்கியங்கள்தான் சிறந்தவைகள் என்று இலக்கியச் சொற்பொழிவுகள் நிகழ்த்துவதற்கோ; தமிழன்தான் இந்த உலகின் பூர்வீகக் குடி, இந்தியாவின் பூர்வீகக் குடி என்ற பேருண்மையினை விளக்குவதற்கோ, தமிழனுக்குத் தமிழன் ஒருவன்தான் வழியாக, விழியாக, வழிகாட்டியாக, வழித்துணையாக, வழிப்பயனாக இருக்க முடியும், இருக்க முடியும், இருக்க முடியும் என்ற கருத்தைப் பரப்புவதற்கோ ஆளில்லை, ஆளில்லை, ஆளில்லை, ஆளே இல்லை.

ஏறத்தாழ, படித்துப் பட்டம் பெற்ற தமிழன் முதல் படிப்பறிவே இல்லாத கட்டைவிரல் தமிழன் வரை தனக்குக் கூலி கொடுத்தால் யாருக்கு வேண்டுமானாலும் வேலியாக இருக்கத் தயாராக இருக்கின்றான். அதுமட்டுமல்ல. தன்னையே விற்கவோ, ஒத்தி வைக்கவோ, அடகு வைக்கவோ, எந்த நாட்டின் குடிமகனாகவும் ஆக்கிக் கொள்ளவோ தரங்கெட்ட பொருள்வெறி பிடித்த அனாதையாகி விட்டான் படித்தவனும், படிக்காதவனும்.

இந்த நிலையில் அரசியல் வாதிகள், இலக்கிய வாதிகள், கலையுலக வாதிகள், சமுதாய வாதிகள், சமயவாதிகள், ... முதலிய அனைவருமே பட்டிமன்றங்கள் நடத்துகிறார்கள், முத்தமிழ் விழாக்கள் கொண்டாடுகிறார்கள், கவிதை அரங்கேற்ற விழாக்கள் நடத்துகிறார்கள்,

பேச்சுப் போட்டி நடத்துகிறுர்கள், மனித வடிவில் உலா வருகிறுர்கள். யாருக்குமே உண்மையை எண்ணி வெட்கப்படவோ, வேதனேப்படவோ, கூச்சப்படவோ, அச்சப்படவோ மனித மனம் இல்லே, மனித மனம் இல்லே, மனித மனம் இல்லே; தமிழ்ச் சிந்தை இல்லே, தமிழ்ச் சிந்தை இல்லே, தமிழ்ச் சிந்தை இல்லே.

இந்த அவலக் கேவலங்களே அகற்றிடத் தம் வாழ்க்கை முழுவதும் பாடுபட்டுக் கொண்டே இருக்கிறுர், பாடுபட்டுக் கொண்டே இருக்கிறுர், பாடுபட்டுக் கொண்டே இருக்கிறுர் இ.மு.க.வின் பாரம்பரியத் தலேவர், அந்தணர் அண்ணல், ஞாஞச்சாரியார். இவரிடம் கொள்கை விளக்கம் கேட்டிருக்கிறீர்கள் நீங்கள்!?

5) தமிழ் உணர்வுடைய தமிழனே! மெய்யான தமிழ் நெஞ்சமும், தமிழ்ச் சிந்தையும் உடையவர்கள் விரல் விட்டு எண்ணக் கூடியவர்களாவது முழுமையாகத் தங்களே தமிழுக்காக அர்ப்பணித்துக் கொள்ளும் பக்குவம் பெற்று தமிழின மொழி மத விடுதலேத் தத்துவமான இந்துவேத நாயகம் அந்தணர் அண்ணல், ஞாஞச்சாரியாரிடம் முறையான பயிற்சிகளேப் பெற்றுத் தமிழ்நாட்டுக்குள் செயல்படத் துவங்கிஞல் ஒரு சில ஆண்டுகளுக்குள் தமிழர்களே இந்துமத உணர்வு எனும் ஓர் இழையில் பின்னிப் பிணேத்து ஒன்று திரட்டிடலாம்.

உன்ஞல் முடியாவிட்டாலும் உனக்கு அறிமுகமானவர்கள் யாராவது கிடைத்தால் உடனே குருபீடத்திற்கு அனுப்பி வை. குருபீடத்தோடு தொடர்பு கொள்ளச் சொல். அன்னிய நாட்டவர்களேயோ, அன்னிய இனத்தவர்களேயோ, அன்னிய மொழியினர்களேயோ, மாற்று மதத்தவர்களேயோ, வேற்றுர்களேயோ, தமிழின மொழி மதத் துரோகிகளேயோ, விரோதிகளேயோ நேரடியாகப் பழிப்பதாலோ, இழிப்பதாலோ, பகைப்பதாலோ, சிறுசிறு மோதல்களே

உண்டாக்குவதாலோ பயனில்லை, பயனில்லை, பயனில்லை, பயனே இல்லை.

6) தமிழினத் தந்தை, தன்மான இயக்கம் கண்ட தலைவர், பகுத்தறிவுப் பகலவன், சிறைக்கஞ்சாச் சிங்கம், வெண்தாடி வேந்தர், தந்தை பெரியார் அவர்களை உருவாக்கிய கரூர் பெரும்புலவர் மருதையா பிள்ளை அவர்களின் பேரன் தான் இன்றைய அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார். தந்தை பெரியார் உருவாக்கிய தி.க.வின் மகனே தி.மு.க.; தி.க.வின் பேரனே அ.தி.மு.க. என்ற நிலையில் தாத்தாவுக்கும் பேரனுக்கும் இடையே; அதாவது தி.க.வுக்கும், அ.தி.மு.க.வுக்கும் இடையே ஏற்பட்டுள்ள இமாலய வேறுபாடுகளும், மாறுபாடுகளும், முரண்பாடுகளும்தான் அந்தணர் அண்ணல், ஞானச்சாரியாரை தம்முடைய இந்து முன்னேற்றக் கழகத்தைக் கும்பகோணம் மாசி மக விழாவில் பொதுமக்களின் சொத்தாக ஆக்கிட வைத்தன. இதைப் புரிந்து தங்களைப் போன்றவர்கள் இ.மு.க.வின் வளர்ச்சிக்காக மிகப்பெரிய ஈகங்களையும், தியாகங்களையும், தொண்டுகளையும், துணைகளையும், உதவிகளையும், ஏந்துகளையும், ஆதரவுகளையும் துணிச்சலான வாய்ச்சொல்லாகவாவது வழங்கிட முன்வர வேண்டும், வழங்கிட முன்வர வேண்டும், வழங்கிட முன்வர வேண்டும்.

தங்களுடைய நிலை என்ன? தமிழ்மொழி, இனம், நாடு, மதம், கலை, இலக்கியம், அரசியல் முதலியவை பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டேயிருக்கப் போகிறீர்களா? அல்லது செயல்படப் போகின்றீர்களா?

7) தமிழா! விழிச்சி கொள்!
தமிழா! எழுச்சி கொள்!
தமிழா! பயிற்சி செய்!
தமிழா! முயற்சி கொள்!

தமிழா! உயர்ச்சியைக் குறிக்கோள் ஆக்கிடு!

தமிழா! செழுச்சி பெறு!

தமிழா! ஆட்சிமீட்சி பெறு!

இவற்றிற்காகத் தமிழனே! இந்து முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்திடு. பணியாற்றிடு!

என்ற வீரவசனங்கள் பட்டி தொட்டி, குக்கிராமங்கள், கிராமங்கள், சிறு ஊர்கள், பேரூர்கள், நகரங்கள், மாநகரங்கள், ... முதலிய அனைத்து இடங்களிலும் வீர வசனமாகப் பேசிட ஆட்கள் தேவை, ஆட்கள் தேவை, ஆட்கள் தேவை.

தமிழருக்காக உழைக்கக் கூடிய தமிழன் தேவை. தமிழகத்திற்குள் தமிழன் இல்லாவிட்டாலும், வெளிநாடுகளில் இருந்தாவது தமிழன் வரவழைக்கப்பட்டேயாக வேண்டும். இக்கருத்துக்களைச் செயலாக்கத் தங்கள் நிலை என்ன?

8) உலகிலேயே குடும்ப ஆண்டவர், பட்டவர்; குலதெய்வம்; கிராம தேவர், தேவதை, ...; நாட்டுக் கடவுள் என்ற நால்வகையினரையும் உடைய ஒரே ஓர் ஒப்புயர்வற்ற இந்துமதம்தான் தமிழனுடைய இந்துமதம். இதில்தான் 48 வகைப்பட்ட கோயில்களும், 48 வகைப்பட்ட கடவுளர்களும், 48 வகைப்பட்ட அருளாளர்களும், அருளாளிகளும், அருளாடு நாயகங்களும்; 48 வகைப்பட்ட மருளாளர்களும், மருளாளிகளும், மருளாடு நாயகங்களும், எண்வகைப்பட்ட மூல ஆச்சாரியார்களும், 48 வகைப்பட்ட சித்தர்களும், 63 நாயன்மார்களும், 12 ஆழ்வார்களும், ... இருக்கிறார்கள், இருக்கிறார்கள், இருக்கிறார்கள். இவர்களையெல்லாம் வைத்துக் கொண்டுதான் தமிழருடைய மதத்தின் மறுவாழ்வுக்காகப் பாடுபட வேண்டும்.

குருதிப் பலி நீராட்டும், இறைச்சியுணவும் உடைய தமிழனுடைய கடவுள்கள்; பிறமண்ணினரான பிருமணர்களாலும், அவர்களுடைய சமசுக்கிருத மொழிக்குரிய சனாதன தருமம் எனப்படும் ஹிந்துமதத்தாலும்

பட்டினி போடப்பட்டு பாழாக்கப்பட்டு விட்டார்கள். பிருமணருக்கு வராத அருளும், மருளும், காவடியும், தீச்சட்டியும், பூக்குழியும் மறுக்கப்பட்டன, வெறுக்கப்பட்டன. இவை மாற்றப்பட வேண்டும். நீ எந்த ஒரு பணியையும் ஏற்றுச் செயலாக்கலாம். வருக! வருக! வருக! அஞ்சல் தொடர்பு கொள்க. முடிந்தால் நேரில் வருக.

**அன்பு**

**பதினெண்சித்தர் மடம்,**

**22-2-92.**

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: சித்தரடியார் திரு இராசு நயினு அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# கடவுள்களின் வகைகள் பற்றிய விளக்கம்

ஓம் குருவே துணே!

22-2-92.

பெறுநர்:-

தவத்திரு சுவாமி காந்தி இராமானந்தர்,
திரு இராமகிருட்டிண ஞானயோக தபோவனம்,
விவேகானந்த நகர், அம்மாப்பேட்டை ((P.O.),
பவானி தாலுகா, பெரியார் மாவட்டம் - 638311.

அனுப்புநர்:-

இந்துவேதத்தை இம்மண்ணுலகுக்கு வழங்கிய பதினெண்சித்தர் மடத்தின் மடாதிபதியும், இந்துமதத்தை இம்மண்ணுலகில் தோற்றுவித்த பதினெண்சித்தர் பீடத்தின் பீடாதிபதியும், நிறையக்குரும், கருவறை மூலவர்களின் அம்மையப்பரும், அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானமும் ஆகிய அந்தணர் அண்ணல், ஞாஞச்சாரியார், குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களின் திருவுளக் கருத்தறிந்து திருமடத்திலிருந்து விடுத்துள்ள செயல்விளக்கத் திருவோலே:

1) பேரன்புக்கும், பேரார்வத்துக்கும் உரிய பெரியீர் தவத்திரு சுவாமி காந்தி இராமானந்தர் அடிகள் அவர்களே! தாங்கள் திரு இராமகிருட்டிண ஞானயோகத் தபோவனத்திலிருந்து ஆறுபேர்கள் கும்பகோணம் மாசி மகாமகம் விழாவிற்கு வந்திருந்தது பற்றியும், நீங்கள் ஆறுபேர்களும் காவி வண்ண ஆடை கட்டிய துறவிகளாக

இருந்தது பற்றியும்; வழக்கமாக இராமகிருட்டிண மடத்தவர்கள் அணியக் கூடிய காவி வண்ண மெய்ப்பை (சட்டை) அணியாமலும், காவி வேட்டி துண்டுடன் வந்திருந்த திருக்கோலக் காட்சிகள் பற்றியும்; தாங்கள் தமிழ்மொழியில் புலமையும், தமிழ்மொழிப் பற்றும், தமிழினப் பற்றும், பண்பாட்டுப் பிடிப்பும், பொதுநல நாட்டமும் உடையவர்களாக காட்சியளித்தீர்கள் என்பதும்; குருமகாசன்னிதானத்திற்கு தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. இவை குறித்துக் குருமகாசன்னிதானம் மிகவும் மகிழ்ந்தார், பாராட்டினார், வாழ்த்தினார்.

2) தமிழகத்திற்குள் அருட்துறையில் தமிழ்மொழிப் பற்றும், இன உணர்வும், நாட்டுணர்வும் உடைய காவி கட்டிய துறவிகள் இருக்கிறார்கள் என்பது பெரிய வியப்பே. பெரிய மகிழ்ச்சியே. நல்ல வருங்காலம் இந்து வேதத்திற்கும், இந்து மதத்திற்கும் உண்டு என்பதற்குரிய சிறந்த அறிகுறியே. வாழ்க நீவிர், வளர்க நீவிர்.

3) பதினெண்சித்தர்கள் அண்டபேரண்ட அருளுலக ஆட்சி மொழியான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில் வழங்கியுள்ள இந்து வேதத்திற்குரிய நூற்றெட்டுப் (108) பூசைமொழி நூல்களும், 48 பூசைவிதி நூல்களும், 96 தத்துவ நூல்களும், 144 செயல்சித்தாந்த நூல்களும், இந்துமதத்திற்குரிய 36 வகைப்பட்ட நூல்களும் செயல்வடிவம் பெறுவதற்குத் தங்களைப் போன்ற வாழ்வியலாளர்கள்தான் தேவை. ஏனென்றால், அருளுலகில் பெரும்பாலும் தங்களுக்குள் இருளை உடையவர்களும்; இருளுக்குள் தங்கள் வாழ்வை வைத்துக் கொண்டவர்களும்தான் அதிகம்.

அதாவது, குறிப்பிட்ட கடவுளே போதும், குறிப்பிட்ட வழிகாட்டியே போதும் .... என்பதுபோல் நோக்கையும், போக்கையும் உடையவர்களே மிகுதியாக இருக்கிறார்கள். காலத்தையும், கருத்து மாற்றங்களையும், உலகியல் சூழ்நிலைகளையும், தேவைகளையும், அன்னிய மதங்களின் மோதுதல்களையும், நாத்திகவாதிகளின் துரோக விரோதச் செயல்களையும்,

அரசியல்வாதிகளின் தன்னல வெறிப் போக்குகளையும், ... நினைத்து நினைத்து, உணர்ந்து உணர்ந்து அவற்றிற்கேற்ப அருளுலகச் சிந்தனைகளையும், கருத்துக்களையும் அருளுரைகளாக வழங்குபவர்களோ அல்லது அருட்பணிகளாக நிகழ்த்துபவர்களோ இன்றைய நிலையில் நம் நாட்டில் இல்லை! இல்லை! இல்லை! இல்லவே இல்லை! எனவே அதற்காக தங்களைப் போன்ற துறவிகள் திருமடத்தோடு தொடர்பு கொண்டு தயாரானால் நல்லது. இதுபற்றிச் சிந்திக்க குருதேவர் உங்களைச் சந்திக்கத் தயாராக இருக்கிறார். நீங்கள் வருவதானாலும் வரலாம். அல்லது குருதேவரைத் தங்கள் இடத்திற்கு வரவழைக்க வேண்டுமானாலும் வரவழைத்துக் கொள்ளலாம். அல்லது தாங்கள் தெரிவித்தால் திருமடத்தைச் சேர்ந்த சன்னிதானங்கள் தங்களைப் பார்க்க வருவார்கள்.

**குறிப்பு:-** அருகில் உள்ள சிறுமுகையில் (கோவை மாவட்டம்) பதினெண்சித்தர் மடத்தின் அமைப்புக்கள் இருக்கின்றன. அருள்மிகு பழனியாண்டவர் சன்னிதானம் இர. இராமசாமி, 6/447 திருவள்ளுவர் நகர், சிறுமுகை - 641302, அருள்மிகு பன்னாரி மாரியம்மன் சன்னிதானம் S. அம்பிகாபதி, மாதேசுவரன் கோயில் மலையின் பின்புறம், கணேசபுரம், சிறுமுகை - 641302, கோவை மாவட்டம் அல்லது சேலம் மாவட்டம் இராசிபுரத்தில் மேற்கு மண்டல இ.ம.இ. தலைவர் சித்தரடியார் இர. கங்காதரக் குமார், 17, கவரைத் தெரு, இராசிபுரம் இவர்களோடு தொடர்பு கொள்ள முயற்சி செய்யுங்கள்.

4) பதினெண்சித்தர்களுடைய இந்துவேதமும், இந்துமதமும் தமிழ்மொழியில்தான் இருக்கின்றன. இதில் கூறப்படக் கூடிய கடவுள்களை அப்பா, அம்மா, அண்ணா, அத்தா, அமரா, இறைவா, தெய்வமே, தேவரே, தேவதையே, பட்டவரே, எல்லாவே, ... என்று மிகத் தெளிவாகப் பெயரிடப்பட்டு நாற்பத்தெட்டு வகைகளாகப் பட்டியலிடப்பட்டு பிரித்துக் காட்டப்பட்டிருந்தாலும்; இவர்கள் பிறப்பாலும்,

வாழ்வியல்களாலும், அருளாற்றல்களாலும், செயல்படும் எல்லைகளாலும் மிகமிகத் தெளிவாக வரையறுத்துக் காட்டப்பட்டிருக்கின்றார்கள்.

5) இந்த நாற்பத்தெட்டு வகையைச் சேர்ந்த ஒவ்வொரு கடவுள்களிலும் அருவக் கடவுள்கள், அருவுருவக் கடவுள்கள், உருவஅருவக் கடவுள்கள், உருவக் கடவுள்கள் என்று நான்கு வகையினர்கள் இருக்கின்றார்கள். இந்த நான்கு வகைப்பட்ட கடவுள்களிலும், இவர்கள் இம்மண்ணுலகில் தோன்றிய முறைகளின் அடிப்படையில் திருக்கல், தருக்கல், கருக்கல், குருக்கல் என்ற நான்கு வகையைப் பெறுகிறார்கள். 48 x 4 x 4 = 768 என்று இப்படிக் கடவுள்களிலேயே எழுநூற்று அறுபத்தெட்டு வகைகள் உள்ளன. இக்கடவுள்கள் வாழுகின்ற இடங்கள் (1) 48 வகைப்பட்ட கருவறைகள், (2) 48 வகைப்பட்ட வெட்டவெளிக் கருவறைகள், (3) 48 வகைப்பட்ட வழிபாட்டு நிலையக் கருவறைகள், (4) 48 வகைப்பட்ட கோயில் மூலக் கருவறைகள் என்று ஆக மொத்தம் நூற்றித் தொண்ணூற்று இரண்டு (192) வகைகள் இருக்கின்றன. இவைகள்தான் மனித வாழ்வில் ஏற்படக் கூடிய ஊழ்வினை, ஆள்வினை, சூழ்வினை, வினை என நான்கின் பாதிப்புகளிலிருந்தும்; நாள், கோள், மீன், இராசி என்ற நான்கின் பாதிப்புகளிலிருந்தும்; (1) காற்று, (2) கருப்பு, (3) பேய், (4) பிசாசு, (5) பில்லி, (6) சூனியம், (7) ஏவல், (8) செய்வினை, (9) வைப்பு, (10) கழிப்பு, (11) மருந்து, (12) கண்ணேறு எனும் பன்னிரண்டு பாதிப்புகளிலிருந்தும் காப்பாற்றும் பொறுப்பை ஏற்றுள்ளன.

இவை துறவிகளாகிய உங்களால் ஏதாவது ஒரு நிலையில் புரியப்பட்டு செயலாக்கப்பட்டால் நல்லது. ஞானபோதையிலோ, வாதையிலோ, மயக்கத்திலோ, தேடும் வெளியிலோ, ... கண்மூடி

வாழ்வு உங்களைப் போன்றோருக்கும் வேண்டாம். செயலுக்கு வருக! வெளிச்சத்திற்கு வருக! என்ற பொது வேண்டுகோள் விடுக்கப்படுகிறது.

உடன் பதில்.

**இவண்,**
**பதினெண்சித்தர் மடம்,**
**22-2-92.**

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: கையெழுத்துப் பிறதியாக இருந்தது. யாருடைய கையெழுத்து என்று தெரியவில்லை.//**

# <u>இந்துவேதம் - இந்துமதம்</u>

இந்து வேதத்திற்கும், இந்து மதத்திற்கும் விளக்கம் தருவதற்காகவும், உலகில் ஏற்படக்கூடிய சண்டை சச்சரவுகளை போக்குவதற்கும் கடவுள்களே நேரில் வந்து இந்து வேதத்தின் விளக்கங்களை கூறுகின்றனர். <u>இந்துவேதம் என்பது ஒரு பெரும் கடல் போன்றது</u>. அந்த கடல் தண்ணீரை பாத்திகளில் பாய்ச்சி உப்பு விளைவிப்பார்கள். இதனால் கடல் தண்ணீர் குறைந்துவிடாது, உப்பு விளைவித்துக் கொள்வார்கள். <u>அதுபோல்தான், உப்பு போன்றதுதான் இந்துமதம்</u>. இந்துமதம் என்பது இந்துவேதத்தில் கோடியில் ஒரு பங்கு கூட கிடையாது.

இந்து வேதம் என்பதற்கு 108 பூசை நூல்கள், 48 வகை பூசாவிதி நூல்கள், 96 தத்துவ நூல்கள், 144 செயல்சித்தாந்த நூல்கள் இருக்கின்றன. இவையல்லாமல் நான்மறைகள், நான்முறைகள், நானெறிகள், நான்வேதங்கள் மற்றும் நான் சுருதிகள், நான் ஆரணங்கள், நான் ஆகமங்கள், நான் மீமாம்சைகள், நவநாதங்கள், பதினெண்சித்தங்கள், 36 ஓதங்கள், 96 போதங்கள் இருக்கின்றன. இவையல்லாமல் நியமங்கள், நிட்டைகள், நிடதங்கள், நீதிகள் என்ற நூல்கள் இருக்கின்றன. இவைகளை எல்லாம் முழுமையாக தெரிந்து கொள்வது என்பது கடினம். எனவே இந்துவேதம் என்பது மிகப் பெரிய கடல் போன்றது. இதில் கோடியில் ஒரு பங்காக விளங்குவதுதான் இந்துமதம். எனவே, இந்த கடலில் சிறிது தண்ணீர் எடுத்து உப்பு காய்ச்சுவது போல்தான் இந்து வேதத்திலிருந்து இந்து மதம் உண்டாக்கப்பட்டுள்ளது. இந்து வேதம் என்பது இந்து மதத்தின் பிரதிபலிப்பு அல்ல. இந்து வேதம் சொல்லக்கூடியவற்றில் கோடியில் ஒரு பங்குதான் இந்து மதத்தில் சொல்லப்பட்டுள்ளது.

**//குருதேவர் தமது மாணுக்கர்களுக்காக ஆற்றிய அருளுரை ஒலிப்பேழையிலிருந்து ஒரு பகுதி.//**








11வது பதினெண்சித்தர் பீடாதிபதி

12வது பதினெண்சித்தர் பீடாதிபதி

தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்களின் (கி.பி.785 - 1040) பாரம்பரியத்தில் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் **குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்** அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை **ஞாலகுரு** அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் எழுத்து மங்கிப் போய்க் கொண்டிருக்கும் கோப்புக்களிலிருந்து வழங்கப்படுகின்றன.

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam** Trust, (Regd) East Tambaram, Chennai. Printed by Mr Sivaraman, Kamarajapuram, East Tambaram. Cell: 09972130609 at Sri Vignesh Printers, Madurai.

https://newsletters.gurudevar.org
https://gurudevar.in
https://induism.org
https://books.gurudevar.org
https://gurudevar.org
Email: indhuism@gmail.com

காணிக்கை : ரூ10/-